
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 245 | 4 Pages | 2.4.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 245 | 4 பக்கங்கள் | 2.4.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே**
**மெய்யுணர் வில்லா தவர்க்கு**

**விளக்கம்:**
**மெய்யுணர்வு இல்லாதவர்க்கு ஐந்து புலன்களின் வேறுபாட்டால் வளர்ந்த ஐந்து வகை உணர்வும் முற்றப்பெற்ற போதிலும் பயன் இல்லை.**

# பறவைகளுக்கு நீரும் உணவும் கொடையளிப்போம்: முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் வேண்டுகோள்

சென்னை ஏப் 2

கோடை வெயிலின் கோரத் தாண்டவம் இந்த ஆண்டு முன் கூட்டியே தொடங்கி விட்டது. குறிப்பாக கடந்த 27ந் தேதியில் இருந்து வெப்பத்தின் அளவு இயல்பைவிட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரித்து பதிவாகி வருவதை பார்க்க முடிகிறது.

இதனால் தமிழ்நாட்டில் 100 டிகிரியை தாண்டி பதிவாகும் இடங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அந்த வகையில் நேற்று 6 இடங்களில் வெயில் 100 டிகிரியை தாண்டி பதிவானது.



அதில் அதிகபட்சமாக சேலத்தில் 102.2 டிகிரி வெயில் பதிவாகி இருந்தது. வெயிலின் தாக்கத்தை தாங்க முடியாமல் பலரும் வெளியில் தலைகாட்ட முடியாமல் ஏ.சி. அறைகளிலும், மரங்கள்நிறைந்த நிழல் பகுதிகளிலும் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

சுட்டெரிக்கும் வெயிலால் மனிதர்கள் மட்டுமின்றி பறவைகளும் பாதிக்கப்படுகின்றன. நீர்நிலைகள் காய்ந்து வருவதால் பறவைகள் தண்ணீரும், உணவும் கிடைக்காமல் தவித்து வருகின்றன. இந்த நிலையில், "கோடை வெயிலால் தவிக்கும் பறவைகளுக்கு நீரும் உணவும் கொடையளிப்போம்!" என்று தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். மாடியில் பறவைகளுக்கு உணவு, தண்ணீர் வழங்கும் புகைப்படங்களை பகிர்ந்து இதனை அவர் தெரிவித்துள்ளார்.

## உக்ரைனுக்கு எதிரான போர் முடிவுக்கு வராவிட்டால்... புதினுக்கு எச்சரிக்கை விடுத்த டிரம்ப்

வாஷிங்டன் டி.சி., ஏப் 2

ரஷியா மற்றும் உக்ரைன் இடையேயான போரானது 2022ம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. 3 ஆண்டுகளை கடந்து நடந்து வரும் போரில் பொதுமக்கள், வீரர்கள் என இரு தரப்பிலும் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகி உள்ளனர். இந்த போரை நிறுத்துவதற்கு தூதரக மற்றும் அமைதி பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை.

உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் செயல்பட்டு வருகின்றன. இதற்கேற்ப, அந்நாடுகள் ராணுவம் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன. ரஷியாவுக்கு வடகொரியா ஆதரவளித்து வருகிறது. ஆயிரக்கணக்கான வீரர்களை ரஷிய போரில் ஈடுபடுத்தியது.

இந்நிலையில், அமெரிக்காவில் பைடன் தலைமையிலான அரசு முடிவுக்கு வந்த பின்னர், ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான அரசு, உக்ரைன் போரை நிறுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இதற்காக முதலில், ரஷியாவில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களுக்கு டிரம்ப் அரசு வரி விதிப்பை அமல்படுத்தியது.

போரை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என புதினிடம், டிரம்ப் கேட்டு கொண்டார். ஜெலன்ஸ்கியையும் வெள்ளை மாளிகைக்கு நேரில் அழைத்து பேசினார். இதன்பின்னர், திடீரென உக்ரைனுக்கான நிதியுதவியை அமெரிக்கா நிறுத்தியது. உக்ரைனுக்கான உளவு தகவல்களை அளிப்பதும் நிறுத்தப்பட்டது.

இந்த சூழலில், போரானது முடிவுக்கு வருவதற்கு பதிலாக தீவிரமடைந்தது. ரஷியா, தாக்குதலை தீவிரப்படுத்தியது. இந்த நிலையில், உக்ரைனுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டு வருவதில் ஒத்துழைக்காவிட்டால் கூடுதல் வரி விதிப்பை எதிர்கொள்ள நேரிடும் என ரஷிய அதிபர் புதினுக்கு டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுபற்றி என்.பி.சி. நியூஸ் இதழுக்கு அளித்த நேர்காணலில், நான் அதிக கோபத்தில் இருக்கிறேன். நீண்டகாலம் ஆகியும் நீங்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இல்லையா? என ரஷியாவை குறிப்பிட்டு கூறினார்.

உக்ரைனில் நடந்து வரும் போரை நிறுத்துவதற்கு ரஷியா மற்றும் என்னால் முடியவில்லை என்றால், அது ரஷியாவின் தவறு என்றே நினைக்கிறேன். அப்படி இருக்க கூடாது. ஆனால், அது ரஷியாவின் தவறு என நான் கருதினால், ரஷியாவில் இருந்து வெளிவரும் அனைத்து எண்ணெய்களின் மீது 2வது முறையாக வரிகளை விதிக்க போகிறேன் என மிரட்டும் வகையில் கூறியுள்ளார்.

புதினிடம் இந்த வாரம் பேசுவீர்களா? என்ற கேள்விக்கு பதிலளித்த டிரம்ப், ஆம். ஆனால், புதின் சரியான செயல்களை செய்கிறார் என்றால் மட்டுமே அது நடக்கும். நான் கோபத்துடன் இருக்கிறேன் என புதினுக்கு நன்றாக தெரியும் என்றார்.

## காசாவின் ரபா நகரில் தாக்குதல் நடத்த திட்டம்; பொதுமக்கள் வெளியேற இஸ்ரேல் ராணுவம் உத்தரவு



காசா, ஏப் 2

இஸ்ரேல் ஹமாஸ் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் இந்த மாத தொடக்கத்தில் முடிவுக்கு வந்த நிலையில், காசா மீது இஸ்ரேல் ராணுவம் தொடர் தாக்குதல்களை நிகழ்த்தி வருகிறது. இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுதலை செய்து, ஹமாஸ் அமைப்பினர் தங்கள் ஆயுதங்களை சமர்ப்பித்துவிட்டு காசாவில் இருந்து வெளியேறாவிட்டால் தாக்குதலை மேலும் தீவிரப்படுத்துவோம் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

அதே சமயம், போர்நிறுத்தம் மற்றும் இஸ்ரேலிய படைகளின் வெளியேற்றத்திற்கு ஈடாக, மீதமுள்ள பணயக் கைதிகளை விடுவிப்பதாக ஹமாஸ் கூறியுள்ளது. ஹமாஸ் அமைப்பினரின் பிடியில் சிக்கிய மீதமுள்ள 59 பணயக் கைதிகளில் தற்போது 24 பேர் மட்டுமே உயிருடன் இருக்க வாய்ப்புள்ளதாக நம்பப்படுகிறது.

இந்த நிலையில், காசாவிக் உள்ள ரபா நகரில் இருந்து பொதுமக்கள் வெளியேற இஸ்ரேல் ராணுவம் உத்தரவிட்டுள்ளது. ரபா நகரில் மிகப்பெரிய அளவில்தரைவழிதாக்குதலைநடத்தஇஸ்ரேல்ராணுவம்திட்டமிட்டுள்ளதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. முன்னதாக கடந்த ஆண்டு மே மாதம், ரபா நகரில் இஸ்ரேல் மிகப்பெரிய அளவிலான தாக்குதலை நிகழ்த்தியது. இந்நிலையில், இன்று ரமலான் பண்டிகை தினத்தில் ரபா நகர மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவு பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் புதிய அணு உலைகள் அமெரிக்க நிறுவனத்திற்கு அனுமதி

வாஷிங்டன், ஏப் 2

இந்தியாஅமெரிக்க சிவில் அணுசக்தி ஒப்பந்தம் 2007ம் ஆண்டு அப்போதைய இந்திய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் ஆகியோரால் கையெழுத்திடப்பட்டது. இது தொடர்பான விரிவான பேச்சுவார்த்தைகள், சட்டம் மற்றும் ஒழுங்குமுறை அனுமதிகள், தொழில்நுட்ப அனுமதிகள், பொறுப்பு விதிகள் மற்றும் வரைபடங்கள் தயாரிப்பு ஆகியவற்றை தொடர்ந்து சுமார் 20 ஆண்டுகளுக்கு பிறகு இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான அனுமதி கிடைத்துள்ளது. இதன்படி, இந்தியாவில் அணு உலைகள் அமைக்க இந்திய வம்சாவளியை சேர்ந்த கிருஷ்ணா பி.சிங் என்பவருக்கு சொந்தமான ஹோல்டெக் இன்டா்நேஷனல் என்ற அமெரிக்க நிறுவனத்துக்கு அந்நாட்டின் எரிசக்தி துறை அனுமதி வழங்கியுள்ளது. இந்தியாவில் உள்ள டாடா கன்சல்டிங் என்ஜினியா்ஸ், லாா்சன் அண்ட் டர்போ மற்றும் ஹோல்டெக் நிறுவனத்தின் பிராந்திய துணை நிறுவனமான ஹோல்டெக் ஏஷியா ஆகிய நிறுவனங்களுக்கு சில நிபந்தனைகளுடன் நவீன அணு உலை தொழில்நுட்பத்தைப் பரிமாற்றம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் செயல்பட்டு வரும் அறநிலையத்துறை முதலுதவி சிகிச்சை மையம் பயனடைந்த பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சர்க்கு நன்றி



மதுரையில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் உலகப் புகழ்பெற்ற ஆன்மீகம் மற்றும் சுற்றுலா தலமாக திகழ்ந்து வருகிறது. இக்கோவிலில் ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடைபெறுவது சிறப்பு. இதனால் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நாள்தோறும் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வந்து செல்கின்றனர். தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் திருக்கோவி லுக்கு வருகை தரும் பக்தர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

திருக்கோவிலுக்கும் வரும் பக்தர்களில் முதியோர், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட அனைவருக்கும் அவசரகால சூழ்நிலையை கருத்தில் கொண்டு மீனாட்சி அம்மன் கோவிலுக்கு என தனிப்பட்ட ஆம்புலன்ஸ் மற்றும் முதலுதவி மையம், நிரந்தர தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும் என தமிழ்நாடு அரசிற்கு பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் வலியுறுத்தி வந்தனர். இந்த கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்த தமிழ்நாடு அரசு முதற்கட்டமாக ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்தது. அதனைத் தொடர்ந்து, தீயணைப்புநிலையம்அமைக்க உத்தரவிட்ட நிலையில், தற்போது கிழக்கு கோபுரம் பகுதியில் வருவாய்த்துறை அலுவலகம் அருகே தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது.

மேலும், கடந்த 2022ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலுக்கு என பிரத்யேக முதலுதவி மையம் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது. இதில் இதுவரை 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர். இதற்கு பக்தர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வரும் பக்தர்களில் மயக்கமடைவோருக்கு முதலுதவி அளித்து அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல ஆம்புலன்ஸ் மற்றும் 2 மருத்துவர்கள், 2 செவிலியர்கள், 2 மருத்துவ உதவியாளர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். கோவில் திறந்திருக்கும் நேரம் முழுவதும் இந்த முதலுதவி மையத்தில் மருத்துவர்கள், செவிலியர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர். இங்கு போதுமான மாத்திரைகளும் உள்ளது. உடனுக்குடன் சிகிச்சை கிடைப்பதால், இந்த முதலுதவி சிகிச்சை மையத்திற்கு பக்தர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இது குறித்து கோவில் அதிகாரி தெரிவித்ததாவது:

கோவிலுக்கும் வரும் பக்தர்களின் ஆரோக்கியத்தை பேணும் வகையில், கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் தேதி முதலுதவி சிகிச்சை மையத்தை சென்னையில் நடந்த விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள். வருடம் முழுவதும் நடைபெறும் திருவிழாக்களால் பக்தர்களின் வருகை அதிகரித்துள்ளது. இதனால் பக்தர்கள் அவ்வப்போது உடல்நிலை பாதிக்கப்பட்டு முதலுதவி சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று செல்கின்றனர்.

அந்த வகையில், கடந்த 2 வருடங்களில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு இந்த மையத்தில் முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. மண்டல இணை கமிஷனர் மற்றும் கோவில் இணை கமிஷனர்இணைந்து மையத்திற்கு தேவையான மாத்திரைகள் உள்ளிட்ட வசதிகளை செய்து கொடுக்கின்றனர். இந்த ஆண்டு சித்திரை திருவிழா நடைபெறவுள்ளதால் தற்போது முதலாக இந்த மையத்தில் கூடுதல் வசதிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படக் கூடாது என்பதை கருத்திற்கொண்டு இம்மையத்தினை செயல்பாட்டுக்கு கொண்டு வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோவில் நிர்வாகத்தின் சார்பாகவும், பக்தர்களின் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



**தொகுப்பு**
**இ.சாலி தளபதி எம்.ஏ.,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மதுரை.**
**ம.கயிலைச் செல்வம், பி.இ.,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி),**
**மதுரை.**




## டாஸ்மாக் வழக்கு விசாரணை 8ம் தேதிக்கு தள்ளிவைப்பு

சென்னை, ஏப் 2

சென்னையில் உள்ள டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த 6ந்தேதி முதல் 8ந் தேதி வரை சோதனை நடத்திய அமலாக்கத் துறை, டாஸ்மாக் நிறுவனத்துக்கு மதுபானங்கள் கொள்முதல் செய்தது, பார் உரிமம் வழங்கியது, மதுபானங்களை மதுபான கடைகளுக்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக்கு டெண்டர் வழங்கியது உள்ளிட்டவற்றில் 1,000 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளதாக அறிக்கை வெளியிட்டது.

அமலாக்கத்துறையின் இந்த சோதனை சட்டவிரோதமானது என அறிவிக்கக்கோரி தமிழக உள்துறை செயலாளர் மற்றும் டாஸ்மாக் நிர்வாக இயக்குனர் ஆகியோர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை நீதிபதிகள் எம்.எஸ். ரமேஷ், என்.செந்தில் குமார் ஆகியோர் விசாரித்து வந்தனர். கடந்த முறை இந்த வழக்கை விசாரித்தபோது, அமலாக்கத் துறை பதில் அளிக்க உத்தரவிட்டு அதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என உத்தரவிட்டனர். மேலும், எந்த வழக்குகளின் அடிப்படையில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது என்பது குறித்த விவரங்களையும் பதில் மனுவில் தெரிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தனர். இதற்கிடையே கடந்த மாதம் 25ம் தேதி அந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த வழக்கின் விசாரணையில் இருந்து விலகுவதாக நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், என்.செந்தில்குமார் ஆகியோர் அறிவித்தனர். இதையடுத்து இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம் சுப்ரமணியன், ராஜசேகர் ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு ஒதுக்கப்பட்டது. அதன்படி டாஸ்மாக் வழக்கு எஸ்.எம் சுப்ரமணியன், ராஜசேகர் அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அமலாக்கத்துறை தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர், 60 மணி நேரம் சோதனை நடத்தி பெண் அதிகாரிகளை நள்ளிரவு வரை சிறை பிடித்துள்ளனர். மனித உரிமை மீறல் இது. அமலாக்கத்துறை தாக்கல் செய்துள்ள பதில் மனுவுக்கு பதில் அளிக்க அவகாசம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், தமிழக காவல்துறை இரவில் சோதனை நடத்தியதே இல்லையா? எனக் கேள்வி எழுப்பினர். அதற்கு நள்ளிரவில் சோதனை நடத்தியதில்லை எனத் தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் பதில் அளித்தார். மத்திய அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல், தமிழக அரசின் மனு விசாரணைக்கு உகந்தது அல்ல என தெரிவித்தார். இதைத் தொடர்ந்து தமிழக அரசின் கோரிக்கையை ஏற்ற நீதிபதிகள், அமலாக்கத்துறை பதில் மனுவுக்கு பதில் அளிக்கத் தமிழக அரசுக்கு அனுமதி அளித்து, வழக்கு விசாரணையை வருகிற 8ம் தேதிக்குத் தள்ளி வைத்தனர். மேலும் மக்களுக்காக, ஊழலுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.



தமிழ்நாடுதவ்ஹீத்ஜமாஅத்மதுரைமாவட்டத்தின்சார்பாகரம்ஜான்பெருநாள்தொழுகைமதுரைதமுக்கம்மைதானத்தில் நபி வழியில் நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியில் இஸ்லாமியர்கள் புத்தாடை அணிந்து இறைவனை வேண்டி தொழுகை செய்து ஒருவருக்கொருவர் மார்போடு கட்டி தழுவி தங்களது ரம்ஜான் திருநாள் வாழ்த்துகளை பகிர்ந்துக் கொண்டனர். மேலும் இந்நிகழ்ச்சியில் சிறுவர் முதல் பெரியவர்களும் பெண்களும் பல ஆயிரம் நபர்கள் களுக்கு மேல் திரளாக கலந்து கொண்டு நோன்பு முடியும் நிகழ்ச்சி தமிழ்நாடு தவ்ஹீத் ஜமா அத் மதுரை மாவட்ட தலைவர் ஜாகீர் உசைன்,மாவட்ட செயலாளர்அசன்பாட்ஷா,ஆகியோர்முன்னிலையில்மிகசிறப்பாகநடைபெற்றதுஇதில்.மாநிலசெயலாளர்செங்கோட்டை ஃபைசல் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

# சென்னை விருகம்பாக்கத்தில் பயங்கரம்: வக்கீல் வெட்டிக்கொலை

சென்னை, ஏப். 2

சென்னை விருகம்பாக்கம், கணபதி ராஜ் நகர் பிரதான சாலையில் கடந்த 2 நாட்களாக பூட்டிக்கிடந்த ஒரு வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக அக்கம் பக்கத்தில் வசிக்கும் பொதுமக்கள்நேற்று மாலை விருகம்பாக்கம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அந்த வீட்டின் முன்பக்க கதவு பூட்டி இருந்தது. பின்பக்கம் சென்று பார்த்தனர். பின்புற கதவு திறந்து கிடந்தது. போலீசார் அதன் வழியாக வீட்டுக்குள் சென்று பார்த்தனர்.

அந்த வீட்டின் உள்ளே சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஒருவர், தலையில் வெட்டுக்காயங்களுடன் பிணமாக கிடந்தார். அவரது முகத்தில் வெட்டப்பட்ட கத்தி எடுக்கப்படாமல் அப்படியே இருந்தது. அவரது உடல் அழுகிய நிலையில் காணப்பட்டது. எனவே அவர் கொலை செய்யப்பட்டு 2 நாட்களுக்கு மேல் ஆகி இருக்கலாம் என தெரிகிறது.

போலீசார், உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், கொலை செய்யப்பட்டு கிடந்தவரின் பெயர் வெங்கடேசன் என்பதும், வக்கீல் என்பதும் தெரியவந்தது. அவர் தனது நண்பர் சேதுபதி என்பவருடன் சேர்ந்து அந்த வீட்டை வாடகைக்கு எடுத்து தங்கி இருந்தார்.

வெங்கடேசனை வெட்டிக்கொன்றது யார்? எதற்காக கொலை செய்தனர்? என்பது தெரியவில்லை. அவருடன் தங்கி இருந்த நண்பர் சேதுபதி தலைமறைவாகி விட்டார். கொலையான வெங்கடேசனின் குடும்ப பின்னணி உள்ளிட்ட மற்ற விவரங்கள் தெரியவில்லை. இதுபற்றியும் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# ரெயிலில் செல்லும் பெண் பயணிகளின் பாதுகாப்புக்காக வாட்ஸ்அப் குழு தொடக்கம்

சென்னை, ஏப். 2

ரெயில் பயணத்தின் போது பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்களை தடுக்கவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தமிழ்நாடு ரெயில்வே போலீசார் சார்பில் "ரெயில் பெண் பயணிகள் பாதுகாப்பு" என்ற 'வாட்ஸ்அப் குழு' அமைக்கப்பட்டு உள்ளது. இதை ரெயில்வே டி.ஜி.பி. வன்னியபெருமாள் தொடங்கி வைத்தார்.

இதில் தினந்தோறும் ரெயிலில் பயணிக்கும் பெண்களான காய்கறி வியாபாரிகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் பெண்களுடன் அந்தந்த பகுதியில் உள்ள ரெயில்வே பெண் போலீசாரும் இடம் பெற்றுள்ளனர்.

குறிப்பாக, இவர்கள் குழந்தை பருவம் முதலே ரெயில் பயணம் செய்வதால் ரெயில் பயணத்தில் பெண்களிடம் தொந்தரவு செய்பவர்கள், குற்றம் செய்பவர்கள் குறித்த விவரங்களை அறிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. இந்த குழுவில் சந்தேகப்படும் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்த தகவலை தெரிவித்தால், போலீசாருக்கு நடவடிக்கை எடுக்க எளிதாக இருக்கும். ரெயில்வே டி.ஜி.பி. அறிவுறுத்தல்படி, தமிழகம் முழுவதும் உள்ளரெயில்வேபோலீஸ் நிலையத்திலும் இது போன்ற குழு அமைக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

ரெயில் பயணத்தின் போது தாங்கள் பார்க்கும் வழிப்பறி, குற்றச்சம்பவங்களில் செயல்படுபவர்கள் குறித்த தகவல்களையும் இந்த வாட்ஸ்அப் குழுவில் ரகசியமாக பகிர்ந்து கொள்கிறார்கள். சென்னையில் 23 ரெயில் நிலையங்களில் உள்ள ரெயில்வே போலீசில் இந்த குழு அமைக்கப்பட்டு உள்ளது. இதற்கு பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

# பழைய சீவரம் ஆற்று மணலை ஒப்பந்ததாரர் மூலம் விற்கக் கூடாது: ராமதாஸ்



சென்னை, ஏப். 2

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக அரசு அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டு பழையசீவரம், கள்ளபிரான்புரம் ஆகிய இடங்களில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் ஆற்று மணலை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் விற்பனை செய்ய தமிழக அரசு முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆற்று மணல் தனியார் மூலம் விற்பனை செய்யப்பட்டால் அரசுக்கு வருமானம் கிடைக்காது என்பது மட்டுமின்றி, பொதுமக்களும் மிகஅதிகவிலைகொடுத்து மணலை வாங்க வேண்டியிருக்கும். அதனால், இந்த நடைமுறை அரசுக்கோ, மக்களுக்கோ பயனளிக்காது.

காஞ்சிபுரம் மாவட்டம் பழையசீவரம், கள்ளபிரான்புரம் பகுதிகளில் இயங்கி வந்த மணல் குவாரிகளில் பெருமளவில் முறைகேடுகள் நடப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்ததையடுத்து 2013ம் ஆண்டில் அங்கு செயல்பட்டு வந்த மணல் குவாரிகள் மூடப்பட்டன. அங்கிருந்து எடுக்கப்பட்டு யார்டுகளில் குவித்து வைக்கப்பட்டிருந்த மணல் பறிமுதல் செய்யப்பட்டது. அதில் ஒரு பகுதி அப்போதே ஏல முறையில் விற்பனை செய்யப்பட்ட நிலையில், மீத முள்ளமணலைஇப்போது விற்பனை செய்ய தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.இதுநல்லமுடிவுதான்.

ஆனால், பறிமுதல் செய்யப்பட்ட மணலை அரசே நேரடியாக விற்பனை செய்யாமல் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் விற்பனை செய்ய முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. அதுமட்டுமின்றி, மணலுக்கான விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரமும் அவருக்கேவழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த முறையில் ஒரு யூனிட் மணலுக்கு அரசுக்கு எவ்வளவு தொகை வழங்கப்படும் என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை; ஆனால், தனியார் ஒப்பந்ததாரர் ஒரு யூனிட் மணலை ரூ.7,500 வரை விலை வைத்து விற்பனை செய்ய முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. இது நியாயமல்ல.

அரசின் சொத்துகள் எதுவாக இருந்தாலும் வெளிப்படையாக விற்பனைசெய்யப்பட வேண்டும். பழையசீவரம், கள்ளபிரான்புரம் ஆகிய இடங்களில் உள்ள மணலை அரசுதான்நேரடியாகவிற்பனை செய்யவேண்டும்.மாறாக, தனியார் மூலம் விற்பனை செய்யப்படும்போது அரசுக்கு வருமானம் கிடைக்காது. அதே நேரத்தில் தனியார் அதிக விலைக்கு விற்பனை செய்யும் போது பொதுமக்களுக்கு இன்னும் அதிகமான விலையில்தான் மணல் கிடைக்கும். அதனால், கட்டுமானச் செலவுகள் அதிகரிக்கும்.

கடந்த 2013ம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டம் பழைய சீவரத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆற்று மணலை பறிமுதல் செய்த மாவட்ட நிர்வாகம் 27.11.2013 அன்று பொது ஏலம்மூலம்அந்தமணலை விற்பனை செய்தது. அப்போது ஒரு யூனிட் மணல் ரூ.6,100என்றதொகைக்கு ஏலம் போனது. இப்போதும் ஆன்லைன் முறையில் பொது ஏலம் மூலம் மணலை விற்பனை செய்யலாம். தேவையான பொதுமக்கள் ஆன்லைன் முறையில் மணலை ஏலத்தில் எடுத்துக் கொள்ள முடியும்.

அவ்வாறு செய்யும் போது, சந்தையின் தேவைக்கு ஏற்ப மணலுக்கு அதிக விலை கிடைக்கலாம்; அதன் மூலம் அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும். அதே நேரத்தில் பொதுமக்கள் ஏலத்தில் எடுக்கும் தொகை சந்தை விலையை விட குறைவாகத்தான் இருக்கும் என்பதால் மக்களுக்கும்பயன்கிடைக்கும். இதன்மூலம் அரசு, பொது மக்கள் என இரு தரப்பினரும் பயனடைவார்கள்.

எனவே, பழையசீவரம், கள்ளபிரான்புரம் ஆகிய இடங்களில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் ஆற்று மணலை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் விற்பனைசெய்யும்திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும். மாறாக, அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு யூனிட் ரூ.2,650 என்ற விலையை அடிப்படை விலையாக வைத்து ஆற்று மணலை ஆன்லைன் முறையில் ஏலத்தில் விட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்; ஆன்லைன் ஏல விவரங்களை உடனுக்குடன் பொதுத்தளத்தில் வெளியிட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சென்னை மெரினா கடலில் குதித்து 2 இளம்பெண்கள் தற்கொலைக்கு முயற்சி

சென்னை ஏப் 2

சென்னை மெரினா கடலில் நேற்று இரவு இரண்டு இளம்பெண்கள் குதித்து தற்கொலை செய்ய முயன்றனர். அப்போது இதனைக் கண்ட, அங்கு ரோந்து பணியில் இருந்த தலைமைக் காவலர் குமரேசன் மற்றும் காவலர்கள் உடனடியாக ஓடிச்சென்று இரண்டு இளம்பெண்களையும் காப்பாற்றினர்.

இதையடுத்து அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில், "சகோதரிகளான அவர்கள் இருவரும் தங்களது பெற்றோருடன் தேனாம்பேட்டை பகுதியில் வசித்து வருகின்றனர். ஒருவர் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். மற்றொருவர் கல்லூரியில்படித்துவருகிறார். அவர்களுடைய பெற்றோருக்கு இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டு வந்த நிலையில், இருவரும் விவாகரத்து செய்து கொள்ளப்போவதாக தெரிவித்துள்ளனர்.

இதனால் மனஉளைச்சலுக்கு ஆளான இளம் பெண்கள் இருவரும் தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்துள்ளனர்" என்பது தெரிய வந்தது. இதுகுறித்து அவர்களது பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இருவரையும் மீட்ட போலீசார் அவர்களை ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர்களுக்கு கவுன்சிலிங் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 'திரவுபதி அம்மன் கோவிலை வைத்து சிலர் அரசியல் செய்ய முயற்சிக்கின்றனர்' அமைச்சர் சேகர்பாபு



சென்னை, ஏப் 2

சென்னை சென்ட்ரல் அருகே உள்ள விக்டோரியா அரங்கை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் புனரமைப்பு பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா உள்ளிட்டோர் ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சேகர்பாபு, "திரவுபதி அம்மன் கோவிலை வைத்து சிலர் அரசியல் செய்ய முயற்சிக்கின்றனர். திரவுபதி அம்மன் கோவிலில் பூஜைகள் நடத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம். இன்னும் ஒருவார காலத்தில் திரவுபதி அம்மன் கோவில் திறக்கப்பட்டு, பொதுமக்கள் தரிசனத்திற்கு அனுமதி வழங்கப்படும்" என்று தெரிவித்தார்.

முன்னதாக, விழுப்புரம் மாவட்டம் மேல்பாதி கிராமத்தில் உள்ள திரவுபதி அம்மன் கோவிலை திறக்கவில்லை என்றால், ஆலய நுழைவு போராட்டம் நடத்தப்படும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராமேஸ்வரம் அருகே ரூ.80 லட்சம் மதிப்புள்ள கடத்தல் கடல் அட்டைகள் பறிமுதல்





ராமநாதபுரம் ஏப். 2

ராமேஸ்வரம் கடல் பகுதி அருகே கடத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில், மண்டபத்தில் உள்ள இந்திய கடலோர காவல்படைப் பிரிவு கடத்தல் தடுப்பு நடவடிக்கையை விரைவாக மேற்கொண்டு அப்பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் நேற்று ராமேஸ்வரத்தை அடுத்த தெற்கு உச்சிப்புளி கடற்கரைக்கு அப்பால் சட்டவிரோதமாக கடத்தப்படவிருந்த ரூ.80 லட்சம் மதிப்புள்ள கடல் அட்டைகளை கடலோர காவல் படையினர் பறிமுதல் செய்தனர்.

இந்த நடவடிக்கையின் போது, சுமார் 200 கிலோ எடையுள்ள கடல் அட்டைகள் கொண்ட ஐந்து டிரம்களை கண்டுபிடித்து மீட்டனர். பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகளின் சந்தை மதிப்பு தோராயமாக ரூ. 80 லட்சம் ஆகும்

# தொடர் விடுமுறை எதிரொலி; ஒகேனக்கலில் குவிந்த சுற்றுலா பயணிகள்



தர்மபுரி ஏப் 2

தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலமான ஒகேனக்கல்லுக்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், ஒகேனக்கலுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், வார விடுமுறை மற்றும் ரம்ஜான் பண்டிகை ஆகிய தொடர் விடுமுறைகள் விடப்பட்டுள்ளதால், ஒகேனக்கல் அருவியில் இன்று சுற்றுலா பயணிகள் அதிகஅளவில்குவிந்தனர். அங்கு பரிசல் பயணம் மேற்கொண்ட சுற்றுலா பயணிகள், ஆயில் மசாஜ் செய்து, பிரதான நீர்வீழ்ச்சிகளில் குளித்து மகிழ்ந்தனர்.

சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால், பரிசல் ஓட்டிகள், மசாஜ் தொழிலாளர்கள், மீனவர்கள், வியாபாரிகள் ஆகியோர் தங்களுக்கு வருவாய் அதிகரித்திருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# இப்படி பேசுவது தவறு ஜி விஜய் பேச்சு குறித்து தமிழிசை சவுந்தரராஜன் விமர்சனம்



சென்னை, ஏப். 2

தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் சென்னை பனையூரில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.அப்போது,த.வெ.க. பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் விஜய் பேசியது குறித்து தமிழிசைசவுந்தரராஜன்கூறியதாவது;

"த.வெ.க. தலைவர் விஜய் சாலிகிராமத்தில் சின்ன பையனாக எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் இருந்தார். பின்னர் சாலிகிராமத்தில் இருந்து பனையூருக்கு வந்துள்ளார். வாழ்க்கை விரிவடையும்போது விஜய்க்கு சாலிகிராமத்தில் இருந்து பனையூர் வர வேண்டிய தேவை ஏற்படுகிறது.

அதே போன்றுதான் விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம் அதிகரிக்கும்போது, மீனம்பாக்கத்தில் இருந்து பரந்தூர் தேவைப்படுகிறது. பரந்தூரை மாநில அரசுதான் தேர்வு செய்து கொடுத்தது. வளர்ச்சிக்கு ஆதரவாக பேசினால் விவசாயிகளுக்கு எதிராக பேசுகிறோம் என்று அர்த்தம் இல்லை.

பரந்தூரே வேண்டாம் என்று பனையூரில் இருந்து கொண்டு சொன்னால் எப்படி? த.வெ.க. தி.மு.க. என்று பேசுவது எதுகை மோனைக்குசரியாகஇருக்கலாம், ஆனால் எதிரில் நீங்கள் இல்லை. சினிமாவில்கால்ஷீட் கொடுப்பது போல்அரசியலுக்குவிஜய் கால்ஷீட் கொடுத்து வருகிறார்.

பிரதமர் மோடி குறித்து 'தமிழ்நாட்டின் மீது உங்களுக்கு அக்கறை இல்லையா ஜி?' என்று விஜய் கேட்கிறார். இது மிகவும் தவறு. கொரோனா காலகட்டத்தில் தமிழ்நாடு உள்பட அனைவரையும் காப்பாற்றியவர் பிரதமர் மோடி. விஜய் ஜி, இப்படி பேசுவது தவறு ஜி."

இவ்வாறு தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

# கடலூர் அருகே ரூ.83,500 கள்ள நோட்டுகள் பறிமுதல்



கடலூர் ஏப் 2

அதர்நத்தம் கிராமத்தை சேர்ந்த செல்வம் என்பவர் தனக்கு சொந்தமான இடத்தில்கொட்டகைஅமைத்து கள்ள நோட்டுகள் அச்சடிப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதன் அடிப்படையில் தனிப்படை போலீசார் சம்பவ இடத்திற்கு சென்றனர். அப்போது போலீச்சார் வருவதை கண்ட செல்வம் மற்றும் அவரது கூட்டாளிகள் தப்பி ஓடினர்.

இந்த நிலையில் அந்த கொட்டகையில் போலீசார் சோதனை மேற்கொண்டனர். இந்த சோதனையில் 500 ரூபாய் கள்ள நோட்டுகள் , அச்சடிக்கும் எந்திரம், பேப்பர் பண்டல் என மொத்தம் ரூ. 83,500 கள்ள நோட்டுகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் தப்பி ஓடிய குற்றவாளிகளை தீவிரமாக தேடி வருகின்றனர். இதனையடுத்து கள்ள நோட்டு விவகாரத்தில் போலீசாரால் தேடப்பட்டு வரும் செல்வம் விசிகவில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

# நீலகிரி: இளைஞர்கள் சென்ற கார் திடீரென தீ பற்றி எரிந்ததால் பரபரப்பு

நீலகிரி ஏப் 2

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் நவீன். இவர் கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் படித்து வருகிறார்.

இந்த நிலையில் ரம்ஜான் விடுமுறையை முன்னிட்டு நண்பர்களுடன் மேட்டுப்பாளையத்தில் இருந்து குன்னூருக்கு இன்று சுற்றுலா சென்றார்.



அப்போது குன்னூர் அருகே சென்று கொண்டிருந்தபோது காரின் முன்புறத்தில் புகை வந்ததால் நவீன் காரை ஓரமாக நிறுத்தினார். உடனடியாக காரில் இருந்த அனைவரும் வெளியேறினர்.

இதனையடுத்து கார் மளமளவென பற்றி எரிய தொடங்கியது. உடனடியாக தீயணைப்புத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை அணைத்தனர். மேலும் கார் முற்றிலும் சேதமானது. இதனால் குன்னூர்மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 8 கி.மீ. தூரத்திற்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றது.


இந்த விபத்தால் அந்த சாலையில் செல்லும் வாகனங்கள்மாற்றுப்பாதைக்கு திருப்பி விடப்பட்டன.

# டெலிவரி ஊழியர்களின் நலனுக்காக... சென்னை மாநகராட்சியின் புதிய திட்டம்

சென்னை, ஏப் 2

சென்னைபோன்ற பெருநகரங்களில் ஸ்விக்கி, ஸ்மோட்டோ போன்ற உணவு டெலிவரி சேவை செய்யும் நிறுவனங்கள் 24 மணி நேர உணவு டெலிவரி சேவையை வழங்கி வருகின்றன. இந்த நிறுவனங்களில், உணவு டெலிவரி செய்யும் வேலையில், ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த ஊழியர்கள் மழை, வெயில் போன்ற கடினமான சூழல்களில் கூட டெலிவரி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்த டெலிவரி ஊழியர்களில் 10 சதவ்வீதம் பேர் பெண்கள் ஆவார்கள். இந்த ஊழியர்களுக்கு குடிநீர், கழிவறை போன்ற அடிப்படை வசதிகள் கூட இல்லை என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே உள்ளது. மேலும், ஓய்வுக்கு எடுக்க இடமில்லாமல், சாலை ஓரங்களில் கூடுகிறார்கள்.



இந்நிலையில், இந்த ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு சென்னையின் முக்கிய சாலைகளில்,ஏசி ஓய்வறையை அமைக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளதாக மாநகராஆணையர்குமரகுருபன் தெரிவித்துள்ளார். 600 சதுரடி பரப்பளவில் அமையவுள்ள இந்த ஓய்வறையில், கழிவறை, குடிநீர், செல்போன் சார்ஜ் செய்யும் வசதிகள் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சோதனை அடிப்படையில், அண்ணா நகர், நுங்கம்பாக்கம், ராயப்பேட்டை, மயிலாப்பூர், தி. நகர் போன்ற பகுதிகளில் குளிரூட்டப்பட்ட ஓய்வு அறைகள் அமைக்கப்படவுள்ளன.

# திட்ட மதிப்பை தமிழில் தயாரிக்க கோரிய மனு நெடுஞ்சாலைத்துறைக்கு ஐகோர்ட்டு அதிரடி உத்தரவு

சென்னை, ஏப் 2

சென்னை ஐகோர்ட்டில், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பட்டய பொறியாளர்கள் சங்கத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், "தமிழ்நாட்டில் அலுவல் மொழியாக தமிழ் உள்ளது. தமிழ் வளர்ச்சிக்காக அரசும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. திருவள்ளுவர் விருது, பாரதிதாசன் விருது, திரு. வி.க. விருது என்று ஏராளமான விருதுகளை தமிழறிஞர்களுக்கு வழங்கி அவர்களை ஊக்குவித்து வருகிறது.



ஆனால், நெடுஞ்சாலைத்துறை திட்ட மதிப்பீடு உள்ளிட்ட விவரங்களை தமிழில் தயாரிப்பு இல்லை. ஆங்கிலத்தில் தான் தயாரித்து வருகின்றனர். இதை எதிர்த்து கடந்த 2023ம் ஆண்டு ஜூன் மாதம் தலைமை செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு புகார் மனு அனுப்பினோம். இந்த புகாரை பரிசீலிக்கும்படி நெடுஞ்சாலைத்துறை செயலாளருக்கு தலைமை செயலாளர் பரிந்துரை செய்துள்ளார். ஆனால், இதுவரை எந்த பதிலும் இல்லை" என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டி.பரதசக்கரவர்த்தி, மனுதாரர் கோரிக்கையை 8 வாரத்துக்குள் பரிசீலித்து தகுந்த முடிவினை தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

# 'எம்புரான்' படத்தில் சர்ச்சைக்குரிய வசனங்களை நீக்க வேண்டும் வேல்முருகன் வலியுறுத்தல்

சென்னை, ஏப் 2

தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"பிரபல நடிகர் மோகன் லால் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'எம்புரான்' படத்தில், முல்லைப் பெரியாறு அணை குறித்து அவதூறான கருத்து தெரிவிக்கும் வகையில் சர்ச்சைக்குரிய வசனங்கள் இடம் பெற்றிருக்கிறது. படத்திற்கும், அதன் போக்கிற்கும் தொடர்பே இல்லாமல், முல்லைப் பெரியாறு அணைக்கு எதிராக வன்மத்தை காட்டியிருப்பது வன்மையாக கண்டிக்கதக்கது.



இரண்டு ஷட்டரை திறந்தாலே, மக்களை பலிவாங்குற அணையை அதாவது முல்லைப் பெரியாறு அணையை குண்டு வைத்து தகர்த்தால், கேரளா மறுபடியும் தண்ணீருக்குள் மூழ்கும். அணையை காப்பாற்ற செக் டேம் எனும் சுவர்களால் பயனில்லை, அணையே இல்லாமல் இருந்தால் தான் சரி என்பன போன்ற வசனங்களும் படத்தில் இடம்பெறுகின்றன. தமிழின வெறுப்பை உமிழும் இது போன்ற திரைப்படங்கள், தமிழ்நாடு கேரள மாநில மக்களிடையே நீடித்து வரும் நல்லுறவை சீர்குலைத்து, இருமாநில உறவை கெடுக்கும்.

எனவே, 'எம்புரான்' படத்தில் முல்லைப் பெரியாறு அணை குறித்து அவதூறான கருத்து தெரிவிக்கும் வகையில் சர்ச்சைக்குரிய வசனங்களை நீக்க வேண்டும். தொடர்ந்து அறிவார்ந்த தமிழ்ச் சமூகத்தை கொச்சைப்படுத்தி வரும் போக்கை மலையாள திரையுலகம் கைவிட வேண்டும்."

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பழனி முருகன் கோயிலில் இன்று ரோப் கார் சேவை இயங்காது

பழனி, ஏப் 2

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழனி முருகன் கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வருகை தருகின்றனர். அவர்கள் தரிசனத்திற்காக அடிவாரத்தில் இருந்து செல்ல படிப்பாதை பிரதானவழியாக உள்ளது. மேலும் பக்தர்கள் மலைக்கோவிலுக்கு சென்று வர ரோப் கார், மின்இழுவை ரெயில் ஆகிய சேவைகளும் உள்ளன. இதில் விரைவாகவும், இயற்கை அழகை ரசித்தபடியும் செல்லலாம் என்பதால் பெரும்பாலானோரின் முதல் தேர்வாக ரோப்கார் உள்ளது.

இந்த ரோப்கார் நிலையத்தில் மாதாந்திர, வருடாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவது வழக்கம். அப்போது ரோப்கார் சேவை நிறுத்தப்படும். அதன்படி, நாளை (செவ்வாய்க்கிழமை) பழனி ரோப்கார் நிலையத்தில் பராமரிப்பு பணிகள்நடைபெறுகிறது. இதையொட்டி



ரோப்கார் சேவை அன்று ஒருநாள் மட்டும் இயங்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பழனிக்கு வரும் பக்தர்கள் படி பாதை வழியாக அல்லது மின் இழுவை ரயில் மூலம் மலைக் கோயிலுக்குச் சென்று முருகனை தரிசனம் செய்யுமாறு கோவில்நிர்வாகம்சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கோவில்பட்டி அருகே பெட்ரோல் பங்க் மேலாளர் வெட்டிப் படுகொலை

தூத்துக்குடி, ஏப் 2

தூத்துக்குடி மாவட்டம் கடம்பூர் பகுதியில் பெட்ரோல் பங்க் செயல்பட்டு வருகிறது. இந்த பெட்ரோல் பங்கில் கயத்தார் அருகே உள்ள காப்புலிங்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த செல்லையா என்பவரின் மகன் சங்கிலி பாண்டி (வயது 29) வேலை செய்து வந்தார். பெட்ரோல் பங்க்கின் மேலாளராக வேலை பார்த்து வந்துள்ளார். இன்று வழக்கம் போல் அவர் காலையில் பணிக்கு சென்றுள்ளார்.

ஆனால் நீண்ட நேரம் ஆகியும் அவர் பெட்ரோல் பங்கிற்கு வரவில்லை. இது தொடர்பாக செல்போனில் முயற்சி செய்த போதும் அவர் போன் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் அவர்கள் நண்பர்கள் சிலருக்கு போன் செய்து விசாரித்து பார்த்துள்ளனர். இதற்கிடையே கடம்பூர் சாலையில் யாரோ மர்ம நபர்கள் அவரை வெட்டி படுகொலை செய்த சம்பவம் தெரியவந்தது.




இது தொடர்பாக போலீசாருக்கு தகவல் கிடைத்ததும், அங்கு சென்று விசாரித்ததில் ரத்தக்கறையுடன் உயிரிழந்த நிலையில் சங்கிலி பாண்டி சடலமாக கிடந்துள்ளார். அருகில் ஒரு காரும், அவரது மோட்டார் சைக்கிளும் அங்கு இருந்தன. சம்பவம் தொடர்பாக போலீசார் அப்பகுதியில் விசாரணை நடத்தினர். இதில் வீட்டில் இருந்து பெட்ரொல் பங்கிற்கு கிளம்பிய சங்கிலி பாண்டியயன் கடம்பூர் சாலையில் வந்து கொண்டிருந்தபோது அப்போது எதிரே வந்த கார் ஒன்று வேண்டுமென்றே அவர் மீது மோதியுள்ளதாக கூறப்படுகிறது.

இதில் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்ட சங்கிலி பாண்டியன், அந்த காரில் இருந்த நபர்கள் இறங்கி வந்து அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் வெட்டி படுகொலைசெய்துவிட்டு அங்கிருந்துதப்பி சென்றது தெரியவந்தது. இதையடுத்து சங்கிலி பாண்டியன் உடலை மீட்டு போலீசார் பிரேத பரிசோதனைக்குகயத்தாறு அரசு மருத்துவ மனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் எதற்காக இந்த கொலை நடந்தது என்பது குறித்தும் போலீசார் விசாரணையை நடத்தி வருகின்றனர். மேலும் சங்கிலி பாண்டி வெட்டிப் படுகொலை செய்து தப்பியோடிய கும்பலை கயத்தாறு போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# திருவண்ணாமலை: கொழுந்துவிட்டு எரியும் ஜவ்வாது மலை... தீயில் கருகிய அரிய வகை மூலிகைகள்

திருவண்ணாமலை ஏப் 2

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் அடுத்த ஜவ்வாது மலைத் தொடர் பகுதியில் 205 மலை கிராமங்கள் உள்ளன. ஜவ்வாது மலை அமைந்துள்ள பகுதி மிக நீண்ட கிழக்கு தொடர்ச்சி வனப்பகுதி ஆகும்.

இந்த கிழக்கு தொடர்ச்சி வனப்பகுதியில் யானை, கரடி, மான், காட்டெருமை மற்றும் அரிய வகை பாம்புகள் , அரிய வகை பறவைகள் அதிகளவில் உயிர்வாழ்ந்து வருகின்றன. மேலும் அங்கு அரிய வகை மரங்கள் மற்றும் மூலிகை செடிகள் உள்ளன.



இந்தநிலையில்அடர்ந்த வனப்பகுதியில் காட்டுத்தீ ஏற்பட்டது. இந்த தீ மளமளவென அதிகளவு கொழுந்துவிட்டு எரிந்து வருவதால் அரிய வகை மூலிகை செடிகள் மற்றும் மரங்கள் எரிந்து நாசமாகின.

இந்த காட்டுத்தீயால் வனவிலங்குகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த தீயை அணைக்க தீயணைப்புத்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என வனத்துறையினர் மற்றும் உள்ளூர்மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விசைத்தறி தொழிலை காப்பாற்றுவதற்கு மாநில அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்: ஈ.ஆர்.ஈஸ்வரன்

சென்னை, ஏப் 2

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன்வெளியிட்டுள்ளஅறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கொங்கு மண்டலம் முழுவதும் கூலி உயர்வு கேட்டும்பல்வேறுகோரிக்கைகளை வலியுறுத்தியும் கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறியாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள். போராட்டத்தைமுடிவுக்கு கொண்டு வர அமைச்சர்கள் தலைமையில் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடப்பதாக அறிகின்றேன். இன்றைக்கு இருக்கின்ற விலைவாசி ஏற்றம், பள்ளி கல்லூரி கட்டணங்கள் ஆகியவற்றோடு பலவிதமான தேவைகளும் விசைத்தறியாளர்களுக்கு அதிகரித்திருக்கிறது. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு விசைத்தறியாளர்களுடைய கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து தீர்வு காண வேண்டும்.

மத்திய அரசினுடைய பல்வேறு கொள்கை நிலைப்பாடுகளும் ஜவுளி ஏற்றுமதிக்கு உறுதுணையாக இல்லை என்பதும் இப்பிரச்சனைகளுக்கு முக்கிய காரணமாக இருக்கின்றது. கொள்கை மாற்றங்களை கொண்டு வந்து



விசைத்தறி தொழிலை காப்பாற்றுவதற்கு மாநில அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசுக்கும் கோரிக்கை வைத்து விசைத்தறி தொழிலுக்கு ஆதரவான கொள்கைகளை வகுக்க முதலமைச்சர் வலியுறுத்த வேண்டும். அமைச்சர்கள் தலைமையில் நடந்து கொண்டிருக்கின்ற முத்தரப்பு பேச்சுவார்த்தையை துரிதப்படுத்தி தாமதம் இல்லாமல் விசைத்தறியாளர்கள் போராட்டத்தைமுடிவுக்கு கொண்டு வர வேண்டும். லட்சக்கணக்கான தொழிலாளர்கள் விசைத்தறியை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அமைச்சர்கள் தலைமையில் ஜவுளி தொழில் நிறுவனங்களும், விசைத்தறியாளர்களும் முடிவை எட்டுவதற்கு தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரையில் போலீஸ் என்கவுன்ட்டர்: ரவுடி சுட்டுக்கொலை

மதுரை, ஏப் 2

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக படுகொலை உள்ளிட்ட குற்றச்சம்பவங்கள், அடுத்தடுத்து நடந்து வருகிறது. இது அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதாக இருந்தது. போலீசார் சுதந்திரமாக செயல்பட்டு குற்றவாளிகள் யாராக இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகின்றனர். குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கி தருவதில் இந்த அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது என்று சட்டசபையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியிருந்தார்.

இந்நிலையில், என்கவுன்டர் ஆயுதத்தை அரசு கையில் எடுத்துள்ளது.



கடந்த சில நாட்களுக்கு முன், சென்னையில் நகை பறிப்பில் ஈடுபட்ட வடமாநில கொள்ளையன் என்கவுன்டரில் சுட்டுக் கொல்லப்பட்டான். தொடர்ந்து தேனி மாவட்டத்தில் போலீஸ்காரரை கொலை செய்த நபர் மீது போலீசார் துப்பாக்கிசூடு நடத்தினர்.

இந்நிலையில் இன்று மதுரை ரிங் ரோட்டில் போலீசார் நடத்திய என்கவுன்ட்டரில் பிரபல ரவுடி சுபாஸ் சந்திர போஸ் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. மதுரை தனக்கன்குளம் மொட்டமலை பகுதியில் கடந்த 22ல் கிளாமர் காளி என்பவர் கொலைசெய்யப்பட்ட வழக்கில் முக்கிய குற்றவாளி ஆவார். கொலை தொடர்பாக இரு தனிப்படைகளை அமைத்து ஆண்டின்பட்டி காவல் துறையினர் தேடி வந்தனர். வழக்கில் ஏற்கெனவே ஜெயக்கொடி, கார்த்திக் உள்பட 7 பேரைதனிப்படை போலீசார் கைது செய்திருந்தது.

கொல்லப்பட்ட நபர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் இருப்பதாகவும், மதுரை வேலம்மாள் கல்லூரி அருகே ஆயுதங்களுடன் காட்டில் பதுங்கி இருந்தவரை போலீசாரை தாக்க முயற்சித்தபோது சுடப்பட்டதாகவும் முதல் கட்ட தகவல் வெளியாகி உள்ளது. சம்பவ இடத்தில் உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அனைத்தும் நன்மைக்கே டெல்லி பயணம் குறித்து செங்கோட்டையன் பதில்

சென்னை, ஏப் 2

அதிமுக மூத்த தலைவர்களில் ஒருவரான செங்கோட்டையன் கடந்த 28ம் தேதி டெல்லி சென்று மத்திய மந்திரிகள் அமித்ஷா, நிர்மலா சீதாராமன் ஆகியோரை சந்தித்து பேசி விட்டு வந்தார். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது இதுவரை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அதிமுக பாஜக கூட்டணி தொடர்பாக அவர்கள் பேசி இருப்பது உறுதியாகி இருக்கிறது. இதன் தொடர்ச்சியாக செங்கோட்டையனுக்கு பாதுகாப்பு மேலும் பலப்படுத்துவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்தநிலையில், செங்கோட்டையன் இன்று மீண்டும் டெல்லி செல்ல இருப்பதாக தகவல் வெளியானது. அதன்படி அவர் டெல்லி புறப்பட்டு சென்றார். முன்னதாக, டெல்லி போறீங்களா? தொடர்ச்சியாக மவுனமாகவே இருக்க காரணம் என்ன? என்ற செய்தியாளர் கேள்விகளுக்கு.. மவுனம் அனைத்தும் நன்மைக்கே என டெல்லி பயணம் குறித்த கேள்விக்கு அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பதில் அளித்து சென்றார். நாளை அவர் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்து பேச இருப்பதாகவும் கூறப்படுகிறது.

தின கனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
2.4.2025

# மதுரையில் ரவுடி என்கவுன்ட்டர் குறித்து போலீஸ் கமிஷனர் லோகநாதன் விளக்கம்



மதுரை, ஏப் 2

மதுரையில் ரவுடி சுபாஷ்சந்திரபோஸ் நேற்று இரவு போலீசாரால் என்கவுன்ட்டரில் சுட்டுக்கொலை செய்யப்பட்டார் என்ற தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு போலீஸ் கமிஷனர் லோகநாதன் சென்றார். இதை தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறும் போது:

சுபாஷ் சந்திரபோசுக்கு காளீஸ்வரன் கொலை வழக்கு மற்றும் பல்வேறு கொலை வழக்குகளில் தொடர்பு இருக்கிறது. இந்த நிலையில் அவரை கைது செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடும் போது துப்பாக்கி வைத்து போலீஸ் இன்ஸ்பெக்டரை சுட முயன்றுள்ளார். இதனால் பாதுகாப்புகருதிசுட்டதில் சுபாஷ் சந்திரபோஸ் உயிரிழந்துள்ளார். மேலும், மதுரை மாநகர் பகுதியில் தொடர் குற்ற சம்பவங்களில் ஈடுபடக்கூடிய நபர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ரம்ஜான் தொழுகை சென்ற போது பைக் விபத்தில் 2 மாணவர்கள் பலி



நாகப்பட்டினம், ஏப்.2

நாகப்பட்டினம் மாவட்டம் திட்டச்சேரி புதுமனை தெருவை சேர்ந்தவர் முகமது தௌபிக் (19). பாலிடெக்னிக் கல்லூரி மாணவர். திட்டச்சேரி புடவைகாரத் தெருவை சேர்ந்தவர் முகமது பாரிஸ் (13). 8ம் வகுப்பு படித்து வந்தார். இவர்கள் இரண்டு பேரும் நேற்று ரமலான் பண்டிகையை முன்னிட்டு திட்டச்சேரியில் உள்ள பெரிய பள்ளிவாசலுக்கு தொழுகைக்கு சென்றனர். தொழுகையை முடித்துக் கொண்டு பைக்கில் வீடு திரும்பினர். பைக்கை முகமது தௌபிக் ஓட்டினார். இவர்கள் திட்டச்சேரி மெயின் ரோட்டில் வந்த போது, திடீரென நிலைதடுமாறி மோட்டார் சைக்கிள் சாலையின் ஓரத்தில் இருந்த சுவற்றின் மீது மோதியது. இதில் கீழே விழுந்த இரண்டு பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

# கிருஷ்ணகிரி: வெந்நீர் கொட்டி மூன்றரை வயது குழந்தை பலி

கிருஷ்ணகிரி, ஏப். 2

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் பகுதியை சேர்ந்தவர் பூபாலன் (வயது 29). இவர் குடும்பத்துடன் ஒசூர் குமுதேபள்ளி அருகே பென்னாமடம் பகுதியில் தங்கி கட்டிட வேலைக்கு சென்று வந்தார்.

பூபாலனுக்கு அனிதா என்ற மனைவி மற்றும் 3½ வயதில் வேதாஸ்ரீ என்ற மகள் இருந்தாள். கடந்த 26ந் தேதி காலை மகளை குளிப்பாட்ட குளியல் அறைக்கு அனிதா அழைத்து சென்றார். பின்னர் வீட்டில் அடுப்பில் சுட வைத்திருந்த வெந்நீரை பாத்திரத்தில் எடுத்து வந்து குளியல் அறையில் வைத்திருந்த வாளியில் ஊற்றினார். அதன்பிறகு துண்டு எடுத்து வர வீட்டுக்குள் சென்றார். இதனிடையே குளியல் அறையில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமி வெந்நீர் வைத்திருந்த வாளியை பிடித்து இழுத்துள்ளாள். இதில் எதிர்பாராதவிதமாக அந்த வாளி கவிழ்ந்து அந்த வெந்நீர் சிறுமி வேதாஸ்ரீ மீது கொட்டியது. இதில் உடல் வெந்து வலியில் அந்த சிறுமி அலறினாள். உடனே அங்கு ஓடி வந்த தாய் உடல் வெந்து வலியால் அலறி துடித்த தனது மகளை உடனடியாக ஒசூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு சேர்த்தார்.

பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக சிறுமி வேதாஸ்ரீ தர்மபுரி அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டாள். அங்கு அந்த சிறுமி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தாள். இந்த சம்பவம் குறித்து ஒசூர் அட்கோ போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பரங்கிமலையில் பரபரப்பு; ஆளுநரின் கான்வாய் மீது பைக் மோதி நொறுங்கியது: மருத்துவ கல்லூரி மாணவன் படுகாயம்

சென்னை, ஏப். 2

ஆளுநரின் கான்வாய் வாகனம் மீது பைக் மோதி நொறுங்கியது. இந்த விபத்தில் மருத்துவக் கல்லூரி மாணவன் படுகாயம் அடைந்தார். பரங்கிமலையில் நடந்த இச்சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுவருகிறது. துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு படையினர் மற்றும் போலீசார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆளுநர் வாகனத்திற்கு முன்னால் போலீசார் ரோந்து வாகனமும், பின்னால் பாதுகாப்பு படையினரின் வாகனங்களும் அணிவகுத்துச் செல்லும். இந்நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று முன்தினம் திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு, சென்னைக்கு விமானத்தில் திரும்பினார். அவரை அழைத்து வர கிண்டி ராஜ்பவனில் இருந்து பாதுகாப்பு படையினர் மற்றும் ஆளுநரின் டம்மி கான்வாய் வாகனங்கள் சென்னை விமான நிலையத்திற்கு விரைந்தன. பாதுகாப்பு படையினரின் கான்வாய் வாகனங்கள் விமான நிலையத்தின் கேட் எண்:6 வழியாக, பழைய விமான நிலையத்திற்குள் செல்ல ஜிஎஸ்டி சாலையில்திரும்பிசென்று கொண்டு இருந்தது.

அப்போது, ஜிஎஸ்டி சாலையில், பல்லாவரத்தில் இருந்து கிண்டி நோக்கி அதிவேகமாக பல்சர் பைக்கில் வந்த இளைஞர் ஒருவர், சிவப்பு சிக்னல் ஒளிர்ந்த நிலையில், அதனை மதிக்காமல் அதிவேகமாக பைக்கை ஓட்டிச் சென்று ஆளுநரின் பாதுகாப்பு வாகனத்தின் மீது மோதி கீழே விழுந்தார். மோதிய வேகத்தில் பைக் அப்பளம்போல் நொறுங்கியது. இதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த பாதுகாப்பு படையினர் கான்வாய் வாகனங்களை உடனே நிறுத்தினர்.

தகவலறிந்து பரங்கிமலை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு படையினர் காரில் இருந்து வெளியே வந்து சுற்றிலும் நோட்டம் விட்டனர். பாதுகாப்பு படையினர் ஒரே நேரத்தில் துப்பாக்கிகளை தயார் நிலையில் வைத்துக்கொண்டு கீழே இறங்கியதைக் கண்ட பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது. இதையடுத்து, போலீசார் படுகாயமடைந்த வாலிபரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். தொடர்ந்து, பாதுகாப்பு படையினரின் கான்வாய் வாகனங்கள் விமான நிலையத்திற்குள் சென்றது. பின்னர், விமானத்தில் வந்து இறங்கிய ஆளுநர் ஆர்.என்.ரவியை அழைத்துக்கொண்டு கான்வாய் வாகனங்கள் ராஜ்பவனுக்கு புறப்பட்டு சென்றன. இந்த விபத்தால் ஆளுநர் பயணத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

இதனிடையே, ஆளுநரின் கான்வாய் வாகனம் மீது மோதிய வாலிபர் குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அதில், பரங்கிமலை பூந்தோட்டம் 2வது தெருவைச் சேர்ந்த சந்தோஷ் (24) என்பதும், கேளம்பாக்கத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரியில் பிசியோதெரபிஸ்ட் படித்து வருவதும் தெரியவந்தது. இதுகுறித்து பரங்கிமலை போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# பழநியில் பங்குனி உத்திர திருவிழா ஏப்.5ல் துவக்கம்

பழநி, ஏப் 2

திண்டுக்கல் மாவட்டம், பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் கொண்டாடப்படும் முதன்மை திருவிழா பங்குனி உத்திரம். இவ்விழாவிற்கு ஈரோடு மாவட்டம், கொடுமுடியில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் தீர்த்தம் எடுத்து வந்து பழநி முருகனுக்கு அபிஷேகம் செய்வது வழக்கம். இவ்விழா வரும் 5ம் தேதி திருஆவினன்குடி கோயிலில் காலை 11 மணிக்கு மேல் 12 மணிக்குள் மிதுன லக்னத்தில் கொடியேற்றத்துடன் துவங்க உள்ளது. விழா நடைபெறும் 10 நாட்களும் வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி வெள்ளிக் காமதேனு, வெள்ளி ஆட்டுக்கிடா, வெள்ளி யானை, தங்கக்குதிரை, வெள்ளிப்பிடாரி மயில் உள்ளிட்ட வாகனங்களில் உலா வரும் நிகழ்ச்சி நடைபெறும்.


முக்கிய நிகழ்ச்சியான திருக்கல்யாணம் 10ம் தேதி நடைபெறுகிறது. அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் கன்யா லக்னத்தில் வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி திருக்கல்யாணம், இரவு 9 மணிக்கு வெள்ளி ரதத்தில் மணக்கோலத்தில் சுவாமி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெறும். முக்கிய நிகழ்ச்சியான பங்குனி உத்திரத் தேரோட்டம் ஏப்.11ம் தேதி மாலை 4.30 மணிக்கு நடைபெறுகிறது. இதன் தொடர்ச்சியாக 14ம் தேதி கொடி இறக்குதலுடன் விழா முடிவடைகிறது.

விழா நடைபெறும் 10 நாட்களும் குடமுழுக்கு நினைவரங்கில் பக்திச் சொற்பொழிவு, பக்தி இன்னிசை, நாதஸ்வர இன்னிசை, பரதநாட்டியம், வீணை இன்னிசை, பொம்மலாட்டம், தேவர் ஆட்டம், விகடம், சாக்ஸபோன், நாட்டுப்புற பாடல்கள் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. பங்குனி உத்திரத் திருவிழாவையொட்டி ஏப்.9ம் தேதி முதல் 13ம் தேதி வரை 5 நாட்கள் பழநி முருகன் கோயிலில் தங்கரத புறப்பாடு ரத்து செய்யப்படும் என கோயில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 9ம் தேதி கோயில் நிர்வாகத்தின் சார்பில் தங்கரத புறப்பாடு நடைபெறும்.

# சென்னை பிராட்வேவில் இருசக்கர வாகனம் சாலை தடுப்பில் மோதி 2 பேர் சாவு

சென்னை பிராட்வே, ராஜா அண்ணாமலை மன்றம் அருகே வேகமாக வந்த பைக் சாலை தடுப்பில் மோதியதில் 2 பேர் உயிரிழந்தனர். பைக்கை ஓட்டி வந்த இம்ரான் என்பவர் சம்பவ இடத்திலேயே பலி, பின்னால் அமர்ந்து வந்த கசாலி பலத்த காயத்தோடு மீட்கப்பட்டுள்ளனர். பலத்த காயங்களோடு மீட்கப்பட்ட கசாலி, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஹெல்மெட் அணியாமல் பைக்கை அதிவேகமாக ஓட்டி மோதியதால் உயிரிழப்பு என காவல் துறை தகவல் தெரிவித்துள்ளது.

# வடிவேலு, பகத் பாசில் நடிக்கும் "மாரீசன்" படத்தின் ரிலீஸ் அப்டேட்




தனது காமெடியால் தமிழ் சினிமாவில் கோலோச்சியவர் வடிவேலு. பின்பு ஹிரோவாகவும் நடித்து தற்போது காமெடி மற்றும் குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடித்து வருகிறார். வடிவேலு தனது அசாத்தியமான நகைச்சுவை கலந்த நடிப்புத் திறமையால் 'வைகைப்புயல்' என்று அழைக்கப்படுகிறார். அவர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு சுந்த.சியுடன் நடிப்பதாக கேங்கர்ஸ் பட அறிவிப்பு பர்ஸ்ட் லுக் போஸ்டருடன் வெளியானது.

'மாமன்னன்' படத்துக்குப் பிறகு பகத் பாசில், வடிவேலு இணைந்து நடிக்க உள்ள புதிய படத்துக்கு 'மாரீசன்' என தலைப்பிடப்பட்டுள்ளது. ஆர்பி சௌத்ரியின் சூப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனத்தின் 98வது படமாக உருவாகும் இப்படத்தை சுதீஷ் சங்கர் இயக்குகிறார். இவர் கடந்த 2009ம் ஆண்டு வெளியான 'ஆறு மனமே' படத்தை இயக்கியிருந்தார். 2014ம் ஆண்டு திலீப் நடிப்பில் மலையாளத்தில் வெளியான 'வில்லாலி வீரன்' படத்தை இயக்கியிருந்தார். படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். 'மாமன்னன்' படத்துக்குப் பிறகு வடிவேலுவும், பகத் பாசிலும் இணைந்து நடிக்க உள்ளதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இப்படம் ஜூலை மாதம் திரையரங்குகளில் வெளியாகும் எனத் தயாரிப்பு நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

# மீண்டும் இணையும் கார்த்தி சிறுத்தை சிவா கூட்டணி

தெலுங்கு திரை உலகில் இயக்குனராக அறிமுகமான சிவா, தற்போது தமிழ் சினிமாவிலும் முன்னணி இயக்குனர்களில் ஒருவராக வலம் வருகிறார். அந்த வகையில் இவர், கடந்த 2011ம் ஆண்டு கார்த்தி, தமன்னா ஆகியோரின் நடிப்பில் வெளியான 'சிறுத்தை' படத்தை இயக்கி ரசிகர்கள் மனதில் இடம் பிடித்து அனைவராலும் சிறுத்தை சிவா என்று அழைக்கப்பட்டு வருகிறார்.

தமிழில் இவர் இயக்கிய முதல் படமே சூப்பர் டூப்பர் ஹிட் அடித்த நிலையில் அஜித்தின் வீரம், வேதாளம், விவேகம், விஸ்வாசம் என தொடர் வெற்றி படங்களை கொடுத்தார். அடுத்தது இவர் ரஜினியை வைத்து அண்ணாத்த திரைப்படத்தை இயக்கினார். மிகுந்த எதிர்பார்ப்புடன் வெளியான இந்த படம் கலவையான விமர்சனங்களை பெற்றது. மேலும் சூர்யாவின் நடிப்பில் பிரம்மாண்ட பட்ஜெட்டில் கங்குவா எனும் பீரியாடிக் திரைப்படத்தை இயக்கினார் சிறுத்தை சிவா. இந்த படம் சிலருக்கு பிடித்திருந்தாலும் சிலரை திருப்திபடுத்தவில்லை. எனவே இப்படம் வசூலிலும் மிகப்பெரிய சரிவை சந்தித்தது. இந்நிலையில்தான் சிறுத்தை படக் கூட்டணி மீண்டும் இணைய இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

அதாவதுநடிகர்கார்த்தி,சிறுத்தைசிவாஇயக்கத்தில்நடித்திருந்தசிறுத்தைதிரைப்படம்அவருக்குநல்லதிருப்புமுனையை ஏற்படுத்தி தந்தது. அதைத்தொடர்ந்து கங்குவா திரைப்படத்தில் வில்லனாக களம் இறங்கினார் கார்த்தி. தற்போது கார்த்தி, மூன்றாவது முறையாக சிறுத்தை சிவா இயக்கத்தில் நடிக்க உள்ளாராம். இந்த படத்தினை சூர்யா தயாரிக்கப் போவதாகவும் இது தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் சொல்லப்படுகிறது. அடுத்தது

இந்த படமானது எமோஷனல் கலந்த கதைக்களத்தில் இருக்கலாம் எனவும் செய்திகள் வெளியாகி வருகின்றன. இருப்பினும் கார்த்தி தன்னுடைய அடுத்தடுத்த கமிட்மெண்டுகளை முடித்த பின்னர் இந்த கூட்டணி இணையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# குட் பேட் அக்லி படத்தின் டிரெய்லர் அப்டேட்!




அஜித் நடிப்பில் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'குட் பேட் அக்லி' திரைப்படம் வெளியாக இன்னும் 9 நாட்களே உள்ள நிலையில் படத்தின் மீதான ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு அதிகரித்துக்கொண்டே போகிறது. மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்திற்கு இசையமைப்பாளர் ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ளார். இப்படம் வருகிற ஏப்ரல் 10ம் தேதி வெளியாக உள்ளது.

இந்த படத்தில் அஜித்துடன் இணைந்து திரிஷா, பிரசன்னா, சுனில், அர்ஜுன் தாஸ், பிரபு உள்ளிட்ட பலரும் முக்கியகதாபாத்திரங்களில்நடித்திருக்கின்றனர்.சமீபத்தில் இப்படத்தின் முதல் பாடலான 'ஓஜி சம்பவம்' பாடல் வெளியாகி வைரலானது. அதனை தொடர்ந்து 2வது பாடலான 'காட் பிளஸ் யூ' வெளியாகி வைரலாகி வருகிறது. ஜி.வி பிரகாஷ் இசையில் இந்த பாடலை அனிருத் பாடியுள்ளார்.

இந்நிலையில் 'குட் பேட் அக்லி' படத்தின் ரிலீஸ் தேதி நெருங்கிவரும் நிலையில் டிரெய்லர் குறித்த அப்டேட் வெளியாகி உள்ளது. அதன்படி, வருகிற ஏப்ரல் மாதம் 3ந் தேதி குட் பேட் அக்லி படத்தின் டிரெய்லர் வெளியாகும் என கூறப்படுகிறது.

# ஐ.பி.எல்.: அதிரடியாக விளையாடுவதை மாற்றமாட்டோம் ஐதராபாத் பயிற்சியாளர் வெட்டோரி





10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் ஐதராபாத் அணி இதுவரை 3 ஆட்டத்தில் ஆடி 1 வெற்றி, 2 தோல்வி கண்டுள்ளது. பேட்டிங்கில் அதிரடியாக விளையாடி ரன்களை குவிக்கும் போக்கை கடைபிடித்து வரும் அந்த அணி முதல் ஆட்டத்தில் ராஜஸ்தானுக்கு எதிராக 286 ரன்கள் குவித்தது.

ஆனால் கடந்த 2 போட்டியில் பேட்டிங்கில் சொதப்பியது. இந்த நிலையில் அதிரடியாக விளையாடுவதை மாற்றமாட்டோம் என ஐதராபாத் அணி பயிற்சியாளர் வெட்டோரி கூறியுள்ளார். இது தொடர்பாக சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது, அதிரடியாக விளையாடும் போக்கை மாற்றுவது பற்றி எந்த உரையாடலும் நடக்கவில்லை. அந்த போக்கை நாங்கள் மாற்ற மாட்டோம். நாங்கள் நிச்சயமாக ஒரு ஆக்ரோஷமான விளையாட்டை விரும்புகிறோம்.

எங்கள் முதல் 3 பேட்ஸ்மேன்கள் விளையாடுவதை பார்த்தால் அது உங்களுக்கு தெரியும். இதுபோன்று விளையாடும் போது தோல்வி ஏற்படலாம் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஆனால், வெற்றி பாதைக்கு திரும்புவோம் என்று நான் நம்புகிறேன். 18 ஐ.பி.எல். சீசன்களின் போக்கைப் பார்த்தால், தொடர்ச்சியாக 2 ஆட்டங்களில் தோல்வியடையாத அணிகள் மிகக் குறைவு. சீசனின் தொடக்கத்தில் ஐதராபாத் இருக்கும் நிலை ஒரு பின்னடைவு அல்ல.

நாங்கள் விளையாடும் ஒவ்வொரு முறையும் மிகச் சிறந்த அணி, நன்கு திட்டமிடப்பட்ட அணிகள் மற்றும் மிகவும் திறமையான வீரர்களை எதிர்கொள்கிறோம். நாங்கள் திரும்பி வந்து வெற்றி பெற முடியாது என்பதற்கு எந்த காரணமும் இல்லை. நாங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும். நாங்கள் விரும்பும் பாணியில் தொடர்ந்து விளையாடுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

# கம்மின்ஸ் எடுத்த முடிவு மிகவும் தவறானது புஜாரா




ஐ.பி.எல். தொடரில் விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற ஐதராபாத் முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் 18.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 163 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது.

தொடர்ந்து 164 ரன் என்ற இலக்கை நோக்கி களம் புகுந்த டெல்லி அணி 16 ஓவரில் 3 விக்கெட்டை மட்டும் இழந்து 166 ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாஅத்தில் அபார வெற்றி பெற்றது. கடந்த ஐ.பி.எல். தொடரில் இருந்து அதிரடியாக ஆடி ரன்கள் குவிக்கும் நடைமுறையை கொண்டுள்ள ஐதராபாத் அணி அதன் காரணமாகவே தோல்விகளை சந்தித்து வருகிறது.

நேற்றைய ஆட்டத்திலும், டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்து அதிரடியாக விளையாட முயற்சி செய்து ஆல் அவுட் ஆனது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், நேற்றைய ஆட்டத்தில் டாஸ் வென்ற ஐதராபாத் கேப்டன் கம்மின்ஸ் முதலில் பேட்டிங் செய்வதாக தவறான முடிவு எடுத்துவிட்டார் என இந்திய வீரர் செத்தேஷ்வர் புஜாரா கூறியுள்ளார்.

இதுதொடர்பாகஅவர்கூறியதாவது,நீங்கள்அதிரடியானமுறையில்விளையாடுவதால்நீங்கள்பெற்றிருக்கும் வெற்றி என்ன?. பத்து போட்டிகளில் இரண்டு போட்டிகளை இப்படி விளையாடி வெற்றி பெறுவதால் என்ன பயன்?. நீங்கள் அதிக எண்ணிக்கையிலான போட்டிகளை வெல்ல வேண்டும். அதற்கு நிலைத்தன்மையை காட்ட வேண்டும். அவர்கள் இதே முறையில் கடந்த ஆண்டு லீக் சுற்றில் சிறப்பாக விளையாடினார்கள்.

ஆனால் நாக்அவுட்டில் ஒரு போட்டி தவறாக முடிய மொத்தமும் முடிந்து விட்டது. மேலும், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்ததுஎனக்குஆச்சரியமாகஇருந்தது.ஏனென்றால், பகலில்விளையாடும்போட்டியில்முதலில்ஆடுகளம் கொஞ்சம் மெதுவாக இருக்கும். அந்த நேரத்தில் பந்து வீச சாதகம் இருக்கும். அவர்கள் பந்து வீச முடிவு செய்யாமல் பேட்டிங் செய்ய முடிவு செய்தது மிகவும் தவறான முடிவு. இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.